III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

O.S.29/2013

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 14-03-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

**2ம் பிரதிவாதி தரப்பின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

முதலாம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன். வா.த.சா.6 ஆவணம் 2ம் பிரதிவாதிக்கு நான் மற்றும் கிறிஸ்டி பெல் ஆகிய இருவரும் எங்களது பொது அதிகார முகவரான முதலாம் பிரதிவாதி மூலம் கிரையம் செய்துள்ளதாக கண்டுள்ளது. ஆதலால் இவ்வழக்கை நான் மட்டும் தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றும் நானும் கிறிஸ்டி பெல்லும் சேர்ந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. எனவே உரிய நபர்கள் சேர்க்கபடாத காரணத்தினால் இவ்வழக்கு பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. வா.த.சா.6 ல் நான் தரப்பினர் என்பதாகையால் பிரிவு 40ன் கீழ் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்தாததினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் நான் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்த தயாராக உள்ளேன். அவ்வாறு செலுத்தினாலும் இவ்வழக்கு

கால தோசத்தால் பாதிக்கப்படும் என்றால் சரியல்ல. முதலாம் பிரதிவாதி என்னை ஏமாற்றி துராக்கிரமாக பவர் பத்திரம் எழுதி வாங்கி கொண்டார் என்று எந்த சங்கதியும் நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் பத்தி 6 ல் 2 ம் பிரதிவாதி என்னை அணுகி முதலாம் பிரதிவாதிக்கு பவர் பத்திரம் கொடுக்க சொல்லி வற்புறுத்தினார் என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.2 எனது வழக்கறிஞர் எனது சார்பாக அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலைய ஆய்வாளருக்கு கொடுத்துள்ள புகாரின் நகல் என்றால் சரிதான். வா.த.சா.2 ல் முதலாம் பிரதிவாதி சதிஸ் என்பரிடம் பிலால் என்னை ஏமாற்றியதாக கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆதலால் சதிஸ் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் பவர் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால் சரியல்ல. வா.த.சா.2 ல் சதிஸ் என்னிடம் அவருக்கு பவர் கொடுத்தால் ரூ.2 கோடிக்கும் அதிகமாக விற்றுக்கொடுப்பதாக கூறியதாகவும் எனவே 08.04.2011 அன்று சதிஸை எனது பவர் ஏஜென்டாக நியமித்தேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.2 முதல் வா.த.சா.4 மற்றும் வா.த.சா.8 ஆகியவை நான் என் சார்பாக காவல் அதிகாரிகளுக்கு கொடுத்த புகார்களின் நகல்கள் என்றால் சரிதான். வா.த.சா.2 முதல் வா.த.சா.4 மற்றும் வா.த.சா.8 உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் அப்புகார்களில் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். அந்த புகார்களுக்கான சமூக பணி பதிவேடுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த புகார்களின் மீது என்ன நடவடிக்கை காவல் நிலையத்தில் எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. 29.12.2010 அன்று நான் பிலால் அகமதுக்கு பவர் கொடுத்தேன். பிலால் அகமதுக்கு நான் கொடுத்த புகாரை நான் ரத்து செய்துவிட்டேனா அல்லது தற்போதும் நிகழ்வில் உள்ளதா என்றால் ரத்து செய்துவிட்டேன். பிலால் அகமதுக்கு கொடுத்த பவர் பத்திரத்தை 08.04.2011 அன்று ரத்து செய்தேன். நான் 2 ம் பிரதிவாதிக்கு நான்கு விக்கிரய பத்திரங்கள் மூலம் தாவா 'A' அட்டவணை சொத்தின் சில பாகங்களை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் கட்டாயத்தின் பேரில் எழுதிகொடுத்தேன். எனது வழக்குரையில் என்னென்ன ஆவணங்கள் நான் கட்டாயப்படுத்தி எழுதி கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால், ------ இந்த கேள்விக்கு பதில் அளிக்காமல் சாட்சி மௌணம் காக்கிறார். ஆவண எண்.1721/2011 தேதி.25.04.2011 , ஆவண எண்.2035/2011 தேதி.11.05.2011 , ஆவண எண்.2122/2011 தேதி.17.05.2011, ஆவண எண்.2554/2011 தேதி.15.06.2011 ஆகியவை

செல்லத்தக்கதல்ல என நான் பரிகாரம் எதுவும் இவ்வழக்கில் கேட்கவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியிடம் இருந்து உரிய பணத்தை பெற்றுக்கொண்டுதான் நான் அந்த கிரைய ஆவணங்களை எழுதி கொடுத்தேன் என்றும் ஆதலால் தான் அந்த ஆவணங்களை ரத்து செய்ய நான் பரிகாரங்கள் கேட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆவண எண்.1530/2011ல் பிலால் அகமதும் ஏழுமலை என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளதாக நான் எனது வழக்குரையில் பத்தி 7ல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆவண எண்.1530/2011 கிரைய ஒப்பந்தத்தை என்னிடம் கட்டாயப்படுத்தி வாங்கிவிட்டதாக நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என்னையும் எனது சகோதரி கிறிஸ்டிபெல்லையும் ஆந்திராவில் 08.04.2011 முதல் எங்களை கடத்தி வைத்திருந்தார். ஆந்திராவில் எந்த ஊரில் எங்களை கடத்தி வைத்திருந்தார் என்பது எனக்கு தெரியாது. நான் என்றைய தேதியில் அங்கிருந்து தப்பித்து வந்தேன் என்பது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. 2011 கடைசியில் அதாவது டிசம்பர் மாதத்தில் நான் தப்பி வந்தேன் என நினைக்கிறேன். இந்த விவரம் எனது வழக்குரையிலும் வா.த.சா.2 முதல் வா.த.சா.4 மற்றும் வா.த.சா.8 ஆகிய புகார்களிலும் நான் சொல்லவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. எனது வழக்கறிஞரிடம் நான் அது பற்றி கூறினேன்.

(2ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).